KAYALPATTINAM MUNICIPALITY
KAYALPATTINAM MUNICIPALITY COUNCIL MONTH OF MAY FORM 3
Minutes of the Meeting held on 29.06.2018

| Date of council meeting | Decision Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| **29.06.2018** | 1592 | **மன்றப் பொருள்:1**<br>காயல்பட்டணம் நகராட்சி பப்பரப்பள்ளி (ம) கோமான்புதூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள Toilet-ற்கு மின் இணைப்பு பெறுவதற்கும், குளோரின் பிளான்டில் Single Face Line-ஐ 3 Face Line ஆக மாற்றி அமைப்பதற்கும் உரிய மின் கட்டணத் தொகை நிர்வாக அவசர அவசியம் கருதி ரூ.10325/– மட்டும் பணி ஆய்வர் திரு.ச.ஹேமந்த் என்பவரால் மின்வாரியத்தில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே பணி ஆய்வருக்கு மின்வாரியத்தில் செலுத்தப்பட்ட மேற்படி தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1593 | **மன்றப் பொருள்:2**<br>காயல்பட்டணம் நகராட்சி ஈப்பு வாகனம் எண்:TN92A6369-க்கு ஓட்டுநர் அறிக்கைப்படி ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பணிகள் கொடை கார்ஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கும், அதற்கான செலவு தொகை ரூ.13647/– மட்டும் இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1594 | **மன்றப் பொருள்:3**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை குத்தகை உரிமம் திரு.எஸ்.மகேஷ் என்பவருக்கு 16.06.2017 முதல் 31.03.2018 வரை வழங்கப்பட்டிருந்தது. தற்போது குத்தகை காலம் முடிவடைந்து விட்டதால் 2018–19ஆம் ஆண்டிற்கு குத்தகை உரிமம் புதுப்பித்துக்கொள்ள உரிய குத்தகை தொகையினை செலுத்தக்கோரப்பட்டதில் குத்தகைதாரர் மேற்படி உரிமத்தை ரத்து செய்யுமாறு கோரியுள்ளார். எனவே குத்தகைதாரரது பொறுப்பு தொகை ரூ.40000/–னை தனியர் செலுத்த வேண்டிய தொகைக்கு பிடித்தம் செய்யப்பட்டது. எனவே மேற்படி குத்தகை உரிமத்தை ரத்து செய்து,நிர்வாக அவசர அவசியம் கருதி துறை ரீதியாக வசூல் நடவடிக்கை மேற்கொண்டதற்கும், மேற்படி குத்தகையினத்தை மறு ஏலம் விடவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1595 | **<u>மன்றப் பொருள்:4</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலக இரவு காவலர் பணியிடம் 31.08.2017 முதல் காலியாக உள்ளதால் நிர்வாக நலன்கருதி இரவு காவலர் (ம) காவலர் பணியிடத்திற்கு Texco நிறுவனத்தின் மூலம் 2 பணியாளர்களை வழங்குவதற்கு Texco நிறுவனத்திற்கு கடிதம் அனுப்ப மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1596 | **<u>மன்றப் பொருள்:5</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகள் முறைப்படுத்துதல் அறிவிப்பு, வரிவசூல் அறிவிப்பு (ம) காலிமனைகளில் உள்ள கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பான அறிக்கையினை ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி விளம்பரம் செய்த வகைக்கும், டிஜிட்டல் பேனர்–5 எண்ணங்கள் தயார் செய்த வகைக்கும், அதற்கான அறிவிப்பு கடிதம் 1000 எண்ணங்கள் தயார் செய்த வகைக்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.20000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1597 | **<u>மன்றப் பொருள்:6</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு S.R.S.ஜெராக்ஸ் நிறுவனத்தின் மூலம் தேவையான ஜெராக்ஸ் எடுத்த வகைக்கு வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை (ரூ.1147+ரூ.2359/–) ரூ.3506/– மட்டும் இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1598 | **<u>மன்றப் பொருள்:7</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகாதார வாகனம் எண்:TN69AT2821 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 2018–19–ம் ஆண்டுக்கு மராமத்து பணிகள் மேற்கொண்டு தகுதி சான்றிதழ் புதுப்பித்துக்கொள்ள ஓட்டுநர் அறிக்கை வழங்கியுள்ளார். அதன்படி பணிகள் TVS நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் , அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.217000/– மட்டும் ஆகும். மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>1599</td><td>

<u>**மன்றப் பொருள்:8**</u>

காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகாதார வாகனம் மற்றும் அலுவலக ஈப்பு வாகனம், குடிநீர் வாகனம் ஆகியவைகளுக்கு ஓட்டுநர் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி சில்லறை செலவினம் மேற்கொண்ட வகைக்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. எனவே பட்டியல் தொகை கீழ்க்கண்ட விபரப்படி ரூ.9660/– மட்டும் ஓட்டுநர் திரு.வெ.ராதாகிருஷ்ணன் என்பவருக்கு இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.

<table>
<tr><th>வ.எண்</th><th>வாகனம் எண்</th><th>தொகை (ரூ)</th></tr>
<tr><td>1</td><td>TN69U6922</td><td>1350/–</td></tr>
<tr><td>2</td><td>TN69AT2821</td><td>2410/–</td></tr>
<tr><td>3</td><td>TN69AT0603</td><td>780/–</td></tr>
<tr><td>4</td><td>TN69S0761</td><td>340/–</td></tr>
<tr><td>5</td><td>TN92B8679</td><td>550/–</td></tr>
<tr><td>6</td><td>TN69S0146</td><td>3630/–</td></tr>
<tr><td>7</td><td>TN92A6369</td><td>600/–</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>9660/–</td></tr>
</table>

</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>1600</td><td>

<u>**மன்றப் பொருள்:9**</u>

காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேசிய டெங்கு தினத்திற்கு மாவட்ட சுகாதாரம் (ம) நோய் தடுப்பு துறை, துணை இயக்குநர் அவர்களின் தொலைப்பேசி செய்தியில் குறிப்பிட்டுள்ளபடி டெங்கு விழிப்புணர்வு பேரணி நடத்துவதற்கு உரிய பேனர்கள் 3 எண்ணங்கள் தயார் செய்த வகைக்கு உரிய தொகை ரூ.2200/– மட்டும் இந்நகராட்சி சுகாதார ஆய்வாளரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சுகாதார ஆய்வாளர் திரு.சி.பொன்வேல் ராஜ் என்பவருக்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.

</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1601 | **<u>மன்றப் பொருள்:10</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்மா இருசக்கர வாகனத் திட்டம் அரசாணை எண்:8, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள்:08.01.2018—ன்படி செயல்படுத்துதல் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மூன்று பேனர்கள் ஆறுமுகநேரி சாந்தா டிஜிட்டல் மூலம் தயார் செய்த வகைக்கு பட்டியல் தொகை ரூ.1200/— மட்டும் மேற்படி நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1602 | **<u>மன்றப் பொருள்:11</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பொதுக்கழிப்பறையில் நச்சுத்தொட்டியானது முழுவதுமாக நிறைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளதால் மேற்படி நச்சுத்தொட்டியினை சுத்தம் செய்வதற்கு மன்ற அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நடை 1—க்கு (ரூ) |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சபரி,<br>செப்டிக் டேங்க் கிளீனிங்,திருச்செந்தூர் | 5100/— |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>லெட்சுமி செப்டிக் டேங்க் கிளீனிங்,திருச்செந்தூர்</td><td>4950/–</td></tr>
<tr><td>3</td><td>மருது செப்டிக்டேங்க் கிளீனிங்,திருச்செந்தூர்</td><td>4800/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்:1 (ம) 2–ஐ விட வரிசை எண்:3 மருது செப்டிக் டேங்க் கிளீனிங்,திருச்செந்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கு.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>1603</td>
<td>
<u>மன்ற பொருள்:12</u><br>
காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.<br>
40 வாட்ஸ் குழல் விளக்குகள் (Tube Light) - 1152 எண்ணம்<br>
150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் - 119 எண்ணம்<br>
250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் - 150 எண்ணம்<br>
2x36 வாட்ஸ் சி எப் எல் விளக்குகள் - 108 எண்ணம்<br>
உயர் கோபுர மின் விளக்குகள் - 6 எண்ணம்<br>
மொத்தம் - 1535 எண்ணம்<br>
மேற்கண்டவாறு உள்ள நகராட்சி தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணி செய்ய தலைமைப்பொறியாளர்,நகராட்சி நிர்வாக ஆணையரகம்,சென்னை அவர்களின் கடிதம். நக. எண். 45490/2013-9/னுமு3 நாள்.24.01.2014 ன்படி அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதன்படி ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ்,திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்பொழுது வரை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்பொழுது இந்நிறுவனத்தின் தெருவிளக்கு பராமரிப்பு காலம் 10.07.2018 உடன் முடிவடைகிறது. ஆனால் தற்பொழுது நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தையும் எல்.இ.டி விளக்குகளாக (Energy Saving Light) மாற்ற அரசின் மூலம் முடிவெடுக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது தெருவிளக்குகளை மாற்றுவதற்கு ஆகும் செலவினத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணிக்கு தகுதியான நிறுவனங்களை தேர்ந்தெடுக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அவர்களின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s.Darashaw & Co.Private Limited, Bangalore என்ற நிறுவனத்தின் மூலம் நகராட்சியின் தெருவிளக்குகள் கணக்கீடு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளதால் தற்பொழுது காயல்பட்டணம் நகராட்சியின் தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிக்கும் பணி செய்ய மீண்டும் மதிப்பீடு தயாரித்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டிய அவசியம் இல்லாத நிலை
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பட்டுள்ளது. அதனால் நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான மின்பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினாலும் தெருவிளக்கு பணி அவசியமான பணியாக இருப்பதாலும் தற்பொழுது நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தையும் LED விளக்குகளாக மாற்ற அரசு முடிவெடுத்து பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியின் தெருவிளக்குகள் அனைத்தையும் LED விளக்குகளாக மாற்றும் பணிக்கான நடவடிக்கைகள் முடிவடையும் வரை நகர்மன்ற தீர்மானம் எண். நாள். ன்படி 11.07.2017 முதல் 10.07.2018 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்ய மன்ற அனுமதி பெறப்பட்டு ஏற்கனவே நகராட்சி தெருவிளக்குகளை பராமரித்து வரும் முந்தைய ஆண்டு ஒப்பந்ததாரர் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ்,திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் மூலம் தற்பொழுதும் 11.07.2018 முதல் 10.07.2019 வரையிலான காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஏற்கனவே தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் நிறுவனமான M/s ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தின் கோரிக்கையின்படி ஏற்கனவே நகர்மன்ற தீர்மானம் எண்.1280 நாள். 05.07.2016 ன்படி அனுமதிக்கப்பட்ட முந்தைய வருடாந்திர செலவினத்தொகை ரூ.23.82 இலட்சத்திலிருந்து கூடுதலாக 4.80% தொகை ரூ.114336/-யினைச்சேர்த்து ரூ.24.97 இலட்சத்திற்கு பராமரிப்புத்தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | 1604 | **மன்றப்பொருள்:13**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள காலியாக உள்ள பள்ளமான இடத்தில் மழைக்காலங்களில் மழை நீர் தேங்கி அசுத்தம் ஏற்படுவதாலும் அருகில் நகராட்சிஅம்மா உணவகம் செயல்பட்டு வருவதாலும் இந்த இடத்தினை சுகாதார நலன் கருதி பள்ளமான இடத்தினை நிரப்பி அந்த இடத்தில் பேவர் பிளாக்கல் அமைத்து சுற்றிலும் பென்சிங் அமைத்து இரண்டு சக்கர வாகன காப்பகம் அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.15.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1605 | **மன்றப்பொருள்:14**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பப்பரப்பள்ளியில் நகராட்சிக்கு சொந்தமான ஆடு மாடு அடிக்கும் தொட்டி கட்டப்பட்டு நகராட்சியின் மூலம் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.இக்கட்டிடத்தில் மாடுகள் வெட்டுவதற்கு போதுமான இடவசதி இல்லாததால் வளாகத்தில் உள்ள காலியான இடத்தில் மாடுகள் கட்டுவதற்கும் வெட்டுவதற்கும் தனியாக செட் அமைக்கவேண்டியது அவசியமாக உள்ளதால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1606 | **மன்றப்பொருள்:15**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சியில் அதிகமான அலுவலக ஆவணங்கள் மற்றும் அலுவலக கடிதங்கள் போன்றவற்றை ஜெராக்ஸ் எடுக்க வேண்டியிருப்பதால் அலுவலக பயன்பாட்டிற்காக ஜெராக்ஸ் எடுக்கும் இயந்திரம் ஒரு எண்ணம் வாங்கவும் அதற்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1607 | **மன்றப்பொருள்:16**<br>காயல்பட்டணம் நகராட்சியில் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி அருகில் மற்றும் தாயிம்பள்ளி சந்திப்பு ஆகிய இடங்களில் 16மீட்டர் உயரமுள்ள இரண்டு எண்ணம் உயர் கோபுர மின் விளக்குகள் 2007-2008 ம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தில் அமைக்கப்பட்டது. இந்நகராட்சியானது கடற்கரைக்கு மிக அருகில் இருப்பதால் இந்த உயர் கோபுரமின்விளக்குகளில் துரு பிடித்து அடிக்கடி உயர் கோபுரமின் விளக்கினை ஏற்றவும் இறக்கவும் செய்திடும் இரும்பிலான ரோப் மற்றும் அதனை இயக்கக்கூடிய மின் மோட்டார் ஆகியவற்றில் பழுது எற்பட்டு விடுகிறது. துற்பொழுது தாயிம்பள்ளி சந்திப்பில் உள்ள உயர்கோபுர மின் விளக்கின் இரும்பிலான ரோப் அறுந்துவிட்படியாலும் இந்த உயர் கோபுரமின் விளக்குகள் அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகி விட்டபடியாலும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதாலும் பொதுமக்களின் நலன் கருதி அதனை பராமரிக்க வேண்டியுள்ளத. எனவே இந்த இரண்டு உயர்கோபுரமின்விளக்குகளையும் முழுவதுமாக பழுதுபார்த்து சீரமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1608 | **மன்றப்பொருள்:17**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு கடையக்குடியில் நில அளவை எண். 278/1பி ல் உள்ளது. இங்கு 5TPD அளவுள்ள பயோ மெத்தனேசன் பிளாண்ட் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் 2017-18ன் கீழ் குப்பைகளை உரமாக்கும் MCC சென்டர்,உரக்கிடங்கு இடத்தினை சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டுதல் மற்றும் இடத்திற்கு செல்ல அணுகு சாலை அமைக்கும் பணிகள் செய்ய ரூ.211.18இலட்சம் அனுமதிக்கப்பட்டு தற்பொழுது சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டு மற்ற பணிகள் நடைபெற்று வருகிறது. தற்பொழுது உரக்கிடங்கு இடத்திற்கு அமைக்கப்பட்டுள்ள அணுகுசாலையின் இரண்டுபுறங்களிலும் மின் விளக்குகள் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1609 | **மன்றப்பொருள்:18**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சிக்கு 4.00 ஏக்கரில் சொந்தமான உரக்கிடங்கு கடையக்குடியில் நில அளவை எண். 278/1பி ல் உள்ளது. இங்கு 5TPD அளவுள்ள பயோ மெத்தனேசன் பிளாண்ட் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் 2017- | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 18ன் கீழ் குப்பைகளை உரமாக்கும் MCC சென்டர்,உரக்கிடங்கு இடத்தினை சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டுதல் மற்றும் இடத்திற்கு செல்ல அணுகு சாலை அமைக்கும் பணிகள் செய்ய ரூ.211.18இலட்சம் அனுமதிக்கப்பட்டு தற்பொழுது சாலை அமைக்கும் பணி முடிக்கப்பட்டு மற்ற பணிகள் நடைபெற்று வருகிறது.மேலும் Sorting Hall and Stock Room கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.வரும் காலங்களில் நகராட்சியால் சேகரிக்கப்படும் குப்பைகளை இங்கு பிரித்தெடுத்து உரமாக்கும் பணிகள் நடைபெற இருப்பதால் உரக்கிடங்கு இடத்தின் உள்பகுதியில் மின் விளக்குகள் அமைக்கவேண்டியது அவசியமாகிறது.ஆதலால் உரக்கிடங்கு உள் பகுதியில் மின் விளக்குகள் அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டபட்படுகிறது. | |
| | 1610 | **மன்றப்பொருள்:19**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சி ஆணையாளரின் அறிவுரைப்படி ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையம், நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி கடற்கரைபூங்கா ஆகிய பகுதிகளில் கண்காணிப்பு கேமிரா பொருத்துவதற்கும் அதற்குரிய செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது | அனுமதிக்கப்பட்டது |
| | 1611 | **மன்றப்பொருள்:20**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சி ஆணையாளரின் அறிவுரைப்படி ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையம், நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி கடற்கரைபூங்கா ஆகிய பகுதிகளில் கண்காணிப்பு கேமிரா பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்கண்ட மூன்று இடங்களிலும் கண்காணிப்பு கேமிரா செயல்பட இன்டர்நெட் இணைப்புடன் கூடிய டெலிபோன் இணைப்பு செய்யவேண்டியுள்ளதால் இன்டர்நெட் இணைப்புடன் கூடிய டெலிபோன் இணைப்பு BSNL மூலம் வழங்கவும் அதற்குரிய செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1612 | **மன்றப்பொருள்:21**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்புத்திட்டம் (TURIP ) 2018-19ன் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பில் சாலைப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க ஏதுவாக கீழ்க்கண்ட விபரப்படியான தொகைக்கு நகர்மன்றத்தில் தீர்மானம் இயற்றி வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடித நக.எண்.12981/2018/இ3 நாள்.27.06.2018 ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br><br>(ரூ.கோடியில்) | அனுமதித்து பார்வையிடப்பட்டது |

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத்திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| காயல்பட்டணம் | 1.00 | 0.46 | 0.30 | 0.14 | 0.10 |
| | | | | | |

1613 **<u>மன்றப்பொருள்:22</u>** — அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டப்பணிகளில் நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் விநியோகக்குழாய்கள் பதிக்கும் பொழுது சேதமடைந்தள்ள சாலைகளில் தற்பொழுது வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்புகள் முழுவதும் வழங்கப்பட்ட கீழ்க்கண்ட சாலையினை தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு நிதி 2018-19ன் கீழ் அரசு மானியம் மற்றும் நகராட்சி பங்குத்தொகையுடன் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நீளம் (கி.மீட்டர்) | அகலம்(மீ) | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | கடையக்குடி சாலையினை (அருணாச்சலபுரத்திலிருந்து கடையக்குடி வரை) பாதுகாப்புச் சுவர் கட்டி மேம்பாடு செய்தல் | 1.390 | 4.00 | 100.00 |

1614 **<u>மன்றப்பொருள்:23</u>** — அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் அனைத்து வகையான சான்றிதழ்களும் அறிக்கைகளும் மற்றும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய அனைத்து வகையான வரி வசூல்களும் கனினி செயல்பாட்டின் மூலம் நடப்பதால் நகராட்சி அலுவலகத்திற்கு புதியதாக கட்டப்பட்ட அலுவலக கட்டிடத்தில் அனைத்து பணியாளர்களுக்கும் கனிப்பொறி வசதி இன்டர் நெட் வசதியுடன் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கனிப்பொறி பயன்பாட்டிற்கான இன்டர்நெட் வசதி செய்வதற்கு திட்ட மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாததால் தனியாக நகராட்சியின் மூலம் மேற்கண்டவாறு பணியினை மேற்கொள்ள நகராட்சி ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின்படி நகர்மன்ற தீர்மானம் எண்.1504

| | | | |
|---|---|---|---|
| | | நாள்.26.12.2017-ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டது. ஆனால் நகராட்சி பணியாளர்களுக்குரிய பர்னிச்சர்கள் விநியோகம் டான்சி நிறுவனத்தால் காலதாமதம் ஏற்பட்டதால் அப்பணியினை உடனடியாக மேற்கொள்ள இயலாத காரணத்தாலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆறுமாதங்கள் கடந்து விட்டபடியாலும் தற்போது பணியின் அவசியம் கருதி மேற்கண்டவாறு பணிகளை செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.40இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | 1615 | **மன்றப்பொருள்:24**<br>காயல்பட்டணம் நகராட்சியில் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பயன்பாட்டில் இல்லாத பழுதடைந்த கழிப்பிடத்தை மேம்பாடு செய்து அதனை பொதுமக்கள் பயன்படுத்தும் விதமாக தகவல் நிலையமாக மாற்றுவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.80இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1616 | **மன்றப்பொருள்:25**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சியின் வருவாயினை அதிகரித்திடும் வகையில் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் புதிய கடைகள் கட்டி வாடகைக்கு விடும் வகையில் புதியதாக கடைகள் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.25.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1617 | **மன்றப்பொருள்:26**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடமான கடற்கரையில் சேகரிக்கப்படும் குப்பைகளை அந்த இடத்திலே மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக்கிட அந்த இடத்தில் ONSITE COMPOST அமைக்க நடவடிக்கை எடுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அவர்களின் அறிவுரையின்படி கடற்கரையில் Onsite Compost அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 7.00இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1618 | **மன்றப்பொருள்:27**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சேகரிக்கப்படும் குப்பைகளை அந்த இடத்திலே மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக்கிட அந்த இடத்தில் ONSITE COMPOST அமைக்க நடவடிக்கை எடுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அவர்களின் அறிவுரையின்படி நகராட்சி அலுவலக வளாகத்தின் அருகில் சேகரிக்கப்படும் குப்பைகளை சேகரித்து உரமாக்கிட அலுவலக வளாகத்தில் ஏற்கனவே உள்ள பழுதடைந்துள்ள திடக்கழிவு மேலாண்மைத்திட்ட கட்டிடத்தினை மேம்பாடு செய்து Onsite Compost அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 7.00இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1619 | **மன்றப்பொருள்:28**<br>காயல்பட்டணம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு ஏற்கனவே 15 கே.வி திறனுள்ள ஜெனரேட்டர் தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. தற்பொழுது SFC- Infra – Gap Filling Fund திட்டத்தின் மூலம் ரூ.150.00இலட்சம் மதிப்பில் புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது.இந்த புதிய அலுவலக பயன்பாட்டிற்கு ஏற்கனவே உள்ள 15 கே.வி திறனுள்ள ஜெனரேட்டர் போதுமானதாக இல்லாததால் புதிய அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக 200கே.வி திறனுள்ள ஜெனரேட்டர் வாங்குவதற்கும் அதற்குரிய செலவினம் ரூ.15.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1620 | **மன்றப்பொருள்:29**<br>காயல்பட்டணம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தில் அம்மா உணவகம் 2014-15ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.இதில் போடப்பட்டுள்ள உணவருந்தும் மேஜைகள் மற்றும் காற்றாடிகள் பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளது.மேலும் சமையலறையில் சமைப்பதற்கு தேவையான பாத்திரங்கள் மற்றும் அடுப்புகள் பழுதடைந்துள்ளதால் அதனையும் பழுதுபார்த்திடவும் ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ. 5.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1621 | **மன்றப்பொருள்:30**<br>காயல்பட்டணம் நகராட்சியில் Sec-15-ல் பணிகள் மேற்கொண்டது பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | பார்வையிடப்பட்டது |
| | 1622 | **மன்றப்பொருள்:31**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியிலுள்ள சாலைகள் மற்றும் புதிய பேருந்து நிலையப்பகுதிகளில் சுற்றித்திரியும் ஆடுகள், மாடுகளின் தொல்லைகள் மற்றும் விபத்துகள் ஏற்படுவதாக புகார்கள் வரப்பெற்றன. மேலும் இப்பொருள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், மனித உரிமை ஆணையம் வழங்கிய ஆலோசனைப்படியும் நம் நகராட்சி பகுதியிலுள்ள சாலைகளில் சுற்றித்திரியும் ஆடு, மாடுகளை பிடித்து அப்புறப்படுத்தியும், ஆடு ஒன்றுக்கு நாள் 1–க்கு ரூ.1000/– வீதமும் மாடு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.2000/– ம் அபராதம் விதிக்கவும் மூன்று நாட்களுக்குள் அபராதம் கட்டி மீட்கப்படாத கால்நடைகளை அரசு பராமரித்து வரும் குலசேகரப்பட்டினம் கோசலையில் ஒப்படைக்கவும் இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | தொகை ரூ.50000/– இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | |